SHOT ON MI 10T PRO

KKST

கன்னியாகுமரி மாவட்டம்

தொகுத்தறித் தேர்வு - டிசம்பர் 2024

வகுப்பு 6

தமிழ்

காலம்: 2.00 மணி மதிப்பெண்கள்: 60

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 10×1=10

1) குற்றம்+இல்லாதவர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..............

அ) குற்றமில்லாதவர் ஆ) குற்றம் இல்லாதவர்

இ) குற்றமல்லாதவர் ஈ) குற்றம் அல்லாதவர்

2) நாம் .............. சொல்படி நடக்க வேண்டும்.

அ) இளையோர் ஆ) ஊரார் இ) மூத்தோர் ஈ) வழிப்போக்கர்

3) படிப்பறிவு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............

அ) படி+அறிவு ஆ) படிப்பு+அறிவு இ) படி+வறிவு ஈ) படிப்பு+வறிவு

4) பிறர் நமக்குச் செய்யும் தீங்கைப் பொறுத்துக் கொள்வது .............. ஆகும்.

அ) வம்பு ஆ) அமைதி இ) அடக்கம் ஈ) பொறை

5) உதித்த என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல் ..............

அ) மறைந்த ஆ) நிறைந்த இ) குறைந்த ஈ) தோன்றிய

6) போர்க்களத்தில் வெளிப்படும் குணம் ..............

அ) மகிழ்ச்சி ஆ) துன்பம் இ) வீரம் ஈ) அழுகை

7) திருவள்ளுவராண்டைக் கணக்கிட நடைமுறை ஆண்டுடன் ..............ஐக் கூட்டிக்கொள்ள வேண்டும்.

அ) 29 ஆ) 30 இ) 31 ஈ) 28

பொருத்துக:

8) விடிவெள்ளி - பஞ்சுமெத்தை

9) மணல் - ஊஞ்சல்

10) புயல் - விளக்கு

II. எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் விடையளி: 5×2=10

11) நாம் யாருடன் சேரக்கூடாது?

12) காமராசர் முதல்வராகப் பொறுப்பேற்றதும் கல்விக்காகச் செய்த முதல் பணி யாது?

13) நாம் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும்?

14) போகிப்பண்டிகை எதற்காகக் கொண்டாடப்படுகிறது?

15) தமிழன் எதற்கு அஞ்சினான்?

16) வணிகம் என்றால் என்ன?

17) மீனவர்கள் தமது வீடாகவும் செல்வமாகவும் கருதுவன யாவை?

III. எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி: 2×2½=5

18) இனஎழுத்துகள் என்றால் என்ன?

19) ண, ன, ந ஆகிய எழுத்துகள் பிறக்கும் முறையைக் கூறுக.

20) சுட்டு எழுத்துகள் என்றால் என்ன? அவை யாவை?

21) அகவினா, புறவினா - வேறுபாடு யாது?

அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 10×1=10

22) கலைச்சொற்கள் எழுது:

அ) Entrepreneur ஆ) Commodity

SHOT ON MI 10T PRO

KK6T



23) தமிழ் எண்ணுரு தருக: 97

24) சொல்லுக்குள் சொல் எடுத்து எழுது:
தைத்திங்கள்

25) தொடரில் அமைத்து எழுது:
நீர்நிலை

26) அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தக்க இடத்தில் சேர்த்து எழுது:
நீங்கள் வரும் போது எனக்குப் புத்தகம் வாங்கி வாருங்கள். (ஒரு)

27) அகர வரிசைப்படுத்தி எழுதுக:
நீலம், கோமேதகம், மாணிக்கம், வைரம், பவளம், வைடூரியம், முத்து மரகதம்

28) இரு பொருள் தரக்கூடிய சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்கள் அமைக்கவும்: ஆறு

29) இன எழுத்துகள் அமைந்துள்ள சொற்களை வட்டமிடுங்கள்:
கங்கை, பக்கம், வண்டு, மட்டபம், மங்கை

30) உரையாடலை நிரப்புக:
செல்வன் : வாங்க மாமா. நலமாக ............?
மாமா :சூ .............. நீ எப்படி இருக்கிறாய்?

31) விவேகானந்தர் பிறந்த நாளை ........... நாளாகக் கொண்டாடுகிறோம்.

**V. அடிபிறழாமல் எழுது:** **2+3=5**

32) 'விருந்து' - என முடியும் திருக்குறளை எழுது.

33) 'பாயும் புயல்' எனத் தொடங்கி ........... நம் பொருள்கள்' வரை உள்ள கடலோடு விளையாடு பாடலை எழுது.

**VI. சொந்த நடையில் எழுது:** **2×4=8**

34) சமுதாயத்தில் உன் பொறுப்புகளை ஐந்து கருத்துகள் வழியாக வெளிப்படுத்துக.

35) எட்டு வரிகளுக்கு மிகாமல் நயம்பட எழுது: நட்பு

**VII. விரிவான விடையளி:** **2×6=12**

36) அ) உழைப்பே மூலதனம் கதையைச் சுருக்கி எழுது.

(அல்லது)

ஆ) அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றிச் சுருக்கமாக எழுது.

37) அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக:
முன்னுரை - இளமைக்காலம் - கல்விப்பணி - நிறைவேற்றிய பிற திட்டங்கள் - முடிவுரை.

(அல்லது)

ஆ) பிறந்த நாள் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.

----------